**<u>சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்</u>**

**முன்னிலை: திருமதி. த. மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, ஓமலூர்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை

**<u>இந்து திருமண அசல் மனு எண்: 124/2025</u>**
**CNR No.TNSA19-000587-2025**

R.கார்த்திக் ...மனுதாரர்

/ எதிராக /

R.மீனா ...எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக என் முன்பாக கொண்டுவரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சதீஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மை காரணமாக அவர் மீது ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்டும், இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனு, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 14.02.2022ம் தேதியன்று நாமக்கல் மாவட்டம், கூலிப்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு கந்தகிரி பழனியாண்டவர் திருக்கோவிலில் இந்து சமய முறையின்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக்கோரி, இந்து திருமணச் சட்டம், பிரிவு 13(1)(i-a) படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் தனது குடும்பத்தில் மூத்த மகன் ஆவார். குடும்ப சூழ்நிலையால் B.E. பட்டப்படிப்பு முடித்திருந்தும் படிப்பிற்கு ஏற்ப வேலை கிடைக்காததால் வாடகை கார் ஓட்டுநராக வேலை செய்து வந்திருக்கிறார். உறவினர்கள் மூலம் எதிர்மனுதாரர் 2021

ஆம் ஆண்டு B.A. (Tamil) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்து வருவதாக அறிந்து, இரு குடும்பங்களின் சம்மதத்துடன் 14.02.2022 அன்று நாமக்கல் மாவட்டம், கூலிப்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு கந்தகிரி பழனியாண்டவர் திருக்கோவிலில் இந்து சமய முறையின்படி திருமணம் நடைபெற்றிருக்கிறது. அந்த திருமணம் கோவில் பதிவு எண் 792/2022 ஆக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. திருமண செலவுகளை இரு வீட்டாரும் சமமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதாரர் மனுதாரருடைய வீட்டில் வாழ்ந்து வந்திருக்கிறார். திருமணத்தின் போது மனுதாரர் சார்பாக எதிர்மனுதாரருக்கு 1/2 சவரன் தங்க நகைகள் வழங்கப்பட்டன.

மேலும், 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் எதிர்மனுதாரர் கர்ப்பமாக இருந்தபோது, அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல மனுதாரர் இருசக்கர வாகனம் வாங்க முற்பட்டபோது, எதிர்மனுதாரரின் வற்புறுத்தலின்பேரில் அந்த வாகனம் அவரது பெயரில் வாங்கப்பட்டு அதன் தவணைகளை மனுதாரர் செலுத்தி முடித்துள்ளார். கூலி வேலை செய்து குடும்ப செலவுகளை பார்த்து கொண்டு மனுதாரர், எதிர்மனுதாரரை நன்றாக கவனித்து வந்தபோதும், எதிர்மனுதாரர் Fridge, Washing Machine, Air Conditioner போன்ற வசதிகள் இல்லையென கூறி அடிக்கடி மனுதாரருடன் சண்டையிட்டு மனுதாரருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறார். மேலும், தனது தாய் தனியாக இருப்பதாக கூறியதால் எதிர்மனுதாரரை 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அவரது தாயார் வீட்டிற்கு மனுதாரர் அனுப்பி வைத்திருக்கிறார். குடும்பத்தை நடத்த போதிய வருமானம் இல்லாததால் மனுதாரர் 2022 ஏப்ரல் முதல் 2022 செப்டம்பர் வரை Zomato நிறுவனத்தில் Delivery Boy ஆக நாள் ஒன்றுக்கு சுமார் 16 மணி நேரம் வேலை செய்து வாரத்திற்கு ரூ.9,000/− சம்பாதித்து வந்திருக்கிறார். அதிக அலைச்சலால் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் மனுதாரர் வேறு வேலை தேட ஆரம்பித்திருக்கிறார்.

மேலும், 2022 செப்டம்பர் மாதத்தில் எதிர்மனுதாரரை மீண்டும் வீட்டிற்கு அழைத்து வர சென்றபோது, "மதம் மாறினால் தான் வீட்டிற்கு வருவேன்" என்று கூறி எதிர்மனுதாரர் மனுதாரரின் வீட்டிற்கு வர மறுத்ததுடன், மனுதாரர் தன்னை

கட்டாயப்படுத்தி திருமணம் செய்ததாகவும் துன்புறுத்தியதாகவும் நாமக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பொய்யான புகார் அளித்து மனுதாரரை அவமானப்படுத்தியிருக்கிறார். பின்னர் விசாரணையில் இரு தரப்பும் சமாதானமாக சென்றிருக்கிறார்கள். அதன் பின்னர் மனுதாரர் Paytm நிறுவனத்தில் Junior Salesman ஆக 15.10.2022 முதல் பணியில் சேர்ந்தார். பின்னர் எதிர்மனுதாரருக்கு வளைகாப்பு நடத்த முடிவு செய்தபோது அவர் கிருஸ்துவ மதத்திற்கு மாற விரும்புவதாகவும் இந்து சமய முறைகளை பின்பற்ற விருப்பமில்லை என்றும் கூறியதால் மனுதாரர் அதிர்ச்சியடைந்து இருக்கிறார். இருப்பினும் உறவினர்களின் வற்புறுத்தலின்பேரில் 2023 ஜூன் மாதத்தில் வளைகாப்பு நடந்திருக்கிறது. கடந்த 25.07.2023 அன்று இராசிபுரம் அரசு மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.

அதன்பின் இருவரும் வாடகை வீட்டில் வசித்தபோது எதிர்மனுதாரர் காலையில் தாமதமாக எழுந்து, வீட்டு வேலைகளை செய்யாமல், அடிக்கடி சண்டையிட்டு, வீட்டில் உள்ள பொருட்களை தூக்கி எறிந்து அக்கம் பக்கத்தினர் முன்னிலையில் மனுதாரரை அவமானப்படுத்தி வந்திருக்கிறார். மேலும் குழந்தையை சரியாக கவனிக்காததால் குழந்தை அடிக்கடி உடல்நலக்குறைவுக்கு ஆளாகியிருக்கிறது. இதனால் மனுதாரர் அவரை சில காலம் அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்திருக்கிறார். மனுதாரர் அனைத்து செலவுகளையும் செய்து வந்தபோதும் எதிர்மனுதாரர் அவரிடம் அன்பு காட்டாமல் அவமரியாதையாக நடந்துகொண்டிருக்கிறார். பின்னர் 2024 ஏப்ரல் மாதத்தில் Paytm வேலையில் போதிய வருமானம் இல்லாததால் மனுதாரர் அந்த வேலையை விட்டு நின்றிருக்கிறார்.

மேலும், 2024 ஆம் ஆண்டு ஊர் திருவிழாவிற்காக அழைத்தபோது எதிர்மனுதாரர் கிருஸ்துவ மதத்திற்கு மாற விரும்புவதாகவும், இந்து கோவில்களுக்கு செல்ல விருப்பமில்லை என்றும், நெற்றியில் பொட்டு, கால்களில் கொலுசு, கைகளில் வளையல்கள் அணிய விருப்பமில்லை என்றும் கூறி தாலியை கழற்றி வீச முற்பட்டுள்ளார். இதனால் ஏற்பட்ட தகராறில் எதிர்மனுதாரரின் உறவினர்கள் மனுதாரரை திட்டி, கன்னத்தில் அறைந்து, சட்டையை பிடித்து கீழே தள்ளி

அவமானப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் குழந்தையை கேட்டபோது "நீ ஆம்பளையே இல்லை, அந்தக் குழந்தை உனக்கே பிறக்கவில்லை; என்னை இங்கிருந்து கூட்டிச் சென்றால் நான் தூக்கிட்டு கொள்கிறேன்" என்று கூறி மனுதாரரை மிரட்டியிருக்கிறார். அதன்பின் பலமுறை அழைத்தும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ வரவில்லை. குழந்தையை பார்க்க முயன்றபோதும் அவரும் அவரது உறவினர்களும் அனுமதிக்காமலும், குழந்தையை கடத்த முயன்றதாக காவல் நிலையத்தில் புகார் அளிப்பதாகவும் கூறி மிரட்டியிருக்கிறார்கள்.

மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முயற்சிசெய்தும் எதிர்மனுதாரர் பிடிவாதமாக தனது பெற்றோர் வீட்டிலேயே வசித்து, மனுதாரரை இழிவாக பேசி அவமானப்படுத்தி வந்திருக்கிறார். மேலும் மனுதாரரை வேலைக்கு செல்ல விடாமல் தடுத்து கடனாளியாக ஆக்கியதுடன், ஒரு நாளும் நிம்மதியாக வாழ விடாமல் தொந்தரவு செய்து வந்ததால், திருமண உறவை ரத்து செய்து கொள்ளலாம் என்று மனுதாரர் 10.04.2025 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருக்கிறார். அதற்கு எதிர்மனுதாரர் முறையான பதில் அளிக்காமல், 24.04.2024 என முந்தைய தேதியிட்டு பதிலறிவிப்பு அனுப்பியிருக்கிறார். பின்னர் 10.05.2025 மற்றும் 14.06.2025 அன்று பெரியோர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தபோதும் அவர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என தெரிவித்ததால், இனிமேற்கொண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என்பதால், விவாகரத்து பரிகாரம் கோரி இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**3.** இம்மனு அறிவிப்பினை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர், இம்மனுவை நடத்த முன்வராததாலும், கடந்த 04.12.2025ம் தேதியன்று அழைத்தும் ஆஜராகாததாலும், அவருக்கு எதிராக ஒருதலைபட்ச (Ex-parte) உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ சான்றாவணங்களோ முன்வைக்கப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவெனில் :-

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணம் ரத்து செய்யத்தக்கதா? என்பதேயாகும்.

**6.** மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் திருமண பத்திரிக்கை ம.சா.ஆ1ஆகவும், திருமண புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், திருமண பதிவுச்சான்றிதழ் ம.சா.ஆ3ஆகவும், குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.4ஆகவும், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆகவும், எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.6ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.7ஆகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** மனுதாரர் தனது மனு சங்கதிகளையே தனது பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள மனு சங்கதிகளையும், வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களையும் பரிசீலிக்கையில், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 14.02.2022-ம் தேதி திருமணம் நடைபெற்றுள்ளது என்பது ம.சா.ஆ.1ன் மூலம் தெரியவருகிறது. திருமணத்தின் பயனாக கடந்த 25.07.2023ம் தேதியன்று ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்பதும் தெரியவருகிறது.

**8.** மேலும், எதிர்மனுதாரர் Fridge, Washing Machine, Air Conditioner போன்ற வசதிகள் இல்லையெனக் கூறி அடிக்கடி மனுதாரருடன் சண்டையிட்டு அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியதுடன், மனுதாரர் தன்னை கட்டாயப்படுத்தி திருமணம் செய்ததாக பொய்யான புகார் அளித்து அவமானப்படுத்தியதாகவும், மேலும், எதிர்மனுதாரர் காலையில் தாமதமாக எழுந்து வீட்டு வேலைகளை செய்யாமல் இருந்து, அடிக்கடி வாக்குவாதம் செய்து அக்கம் பக்கத்தினர் முன்னிலையில் மனுதாரரை அவமானப்படுத்தி வந்ததாகவும், அத்துடன், குழந்தையை சரியாக கவனிக்காத காரணத்தால் குழந்தைக்கு அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்பட்டதாகவும், மேலும்,

எதிர்மனுதாரர் தனது போக்கை மாற்றிக் கொள்ளாமல், கிருஸ்துவ மதத்திற்கு மாறப்போவதாகவும், இந்து கோவில்களுக்கு செல்ல விருப்பமில்லை என்றும் கூறி, குழந்தையை மனுதாரருக்கு காட்ட மறுத்ததாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

மேலும், மனுதாரர் குழந்தையை பார்க்க முயன்றபோதும் அனுமதிக்காமல், காவல் நிலையத்தில் புகார் அளிப்பதாக மிரட்டி, மனுதாரருடன் வாழ்க்கை நடத்த மறுத்து, தனது பெற்றோர் வீட்டிலேயே வசித்து கொண்டு, மனுதாரரை இழிவாக பேசி அவமானப்படுத்தி வந்ததாகவும், மேலும், மனுதாரரை வேலைக்கு செல்ல விடாமல் தடுத்து, கடனாளியாக ஆக்கி, ஒரு நாளும் நிம்மதியாக வாழ விடாமல் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்ததாகவும், இதனால் மனுதாரர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டதாகவும், எனவே இனியும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என்பதாலும், விவாகரத்து கோரி இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். மேற்கண்ட குற்றச்சாட்டுகள் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர் தோன்றா தரப்பினராக (Exparte) அறிவிக்கப்பட்டுள்ளார்.

9. மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்திய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் அவர் தரப்பு வழக்கினை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அவைகள் உண்மை அல்ல என நிரூபிக்கும் வகையில் வழக்கை தொடர்ந்து நடத்த முன்வரவில்லை. மாறாக மனுதாரர் தனது வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்திருக்கிறார். எனவே மனுதாரர் கோரியவாறு விவாகரத்து வழங்கி உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 14.02.2022ம் தேதியன்று நாமக்கல் மாவட்டம், கூலிப்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு கந்தகிரி பழனியாண்டவர் திருக்கோவிலில் இந்து சமய முறையின்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MALATHI Digitally signed by MALATHI Location: subordinate judge, Omalur Date: 2026.03.11 05:10:57 +0530

சார்பு நீதிபதி,
ஓமலூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்.–**

ம.சா.1 – கார்த்திக் (மனுதாரர்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.–**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 14.02.2022 | திருமண பத்திரிக்கை | அசல் |
| 2. | ம.சா.ஆ.2 | 14.02.2022 | திருமண புகைப்படம் | அசல் |
| 3. | ம.சா.ஆ.3 | 14.02.2022 | திருமண பதிவுச்சான்றிதழ் | நகல் |
| 4. | ம.சா.ஆ.4 | 06.11.2023 | மனுதாரர் மகனின் பிறப்புச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 5. | ம.சா.ஆ.5 | 10.04.2025 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 6. | ம.சா.ஆ.6 | 24.04.2024 | எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பு | சார்வு நகல் |
| 7. | ம.சா.ஆ.7 | – | மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் – இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை**

MALATHI Digitally signed by MALATHI Location: subordinate judge, Omalur Date: 2026.03.11 05:11:03 +0530

சார்பு நீதிபதி,
ஓமலூர்.